# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
## NAGAPATTINAM.
**U/filed Crlmp. in S.C.127/2021** P.W. 5

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சிவக்குமார் | Caste: | |
| Father's Name | . கோவிந்தராஜ் | Calling: | |
| Village | :. திருக்குவளை | Religion: | இந்து |
| Taluk | :திருக்குவளை | Age | . |
| Date | : 30.05.2023 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 30.05.2023

(A3 absent u/s.317 Cr.P.C petition is filed and allowed other present. )

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் திருக்குவளையில் வசித்துவருகிறேன். திருக்குவளை திராவிட முன்னேற்ற கழகத்தில் செயலாளராக இருந்து வருகிறேன். தலைமை கழகத்தில் பொதுக்குழு உறுப்பினராக இருந்துவருகிறேன். அந்த ஊரில் யாருக்கேனும் பிரச்சனை என்றால் என்னிடம் சொல்வார்கள் அதன் அடிப்படையில் நாங்கள் பஞ்சாத்து பேசி சமாதானம் செய்து வைப்போம். உத்திராபதி மனைவி லதா என்பவர் 20.06.2014 ந் தேதி என்னிடம் வந்து அவரது கணவர் குடித்துவிட்டு வந்து சண்டைபோடுவதாகவும் அவர்களுக்குள் சண்டை என்றும் என்னிடம் சொன்னார். திருக்குவளையின் அகரவெளி கிளை கழகத்தின் திமுக செயலாளராக இருந்து ஜோதிபாசு என்பவரிடமும் தகவல் சொல்லி கணவன் மனைவி இருவரையும் அழைத்து பேசி சமாதானம் படுத்தி சேர்த்து வைத்தோம். மீண்டும் அவர்களுக்கிடையே பிரச்சனை இருப்பதாக சொன்னார்கள் ஆனால் அதை நாங்கள் கேட்கவில்லை. உத்திராபதியின் சகோதரர் பன்னீர்செல்வம் என்பவர் காவல் நிலையத்தில் பணிபுரிகிறார். அவருடைய தூண்டுதலின் பேரில் 01.07.2017 ந் தேதி 11.30 மணியளவில் ஜோதிபாசும் அவரது மனைவியும் கடைத்தெருவில் டீ கடையில் டீ குடித்துகொண்டிருக்கும்போது உத்திராபதி, அன்பழகன், செல்லமணி ஆகியோர் அடித்து துண்டைப்போட்டு முறுக்கி கீழே தள்ளி கையால் குத்தினார்கள் என்று கேள்விப்பட்டேன். அந்த சண்டை நடந்ததை பார்த்தவர்கள் கடைத்தெருவில் இருந்தவர்கள் என்னிடம் சொன்னார்கள். ஜோதிபாசுவை அது சம்மந்தமாகதொலைபேசியில் தொடர்பு கொண்டபோது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்படி சொன்னேன். அவர் காவல் நிலையத்திற்கு போய் புகார் கொடுத்துவிட்டு வரும்போது உத்திராபதி, செல்லமணி அன்பழகன் ஆகியோர் கத்தியால் அவரை குத்திவிட்டதாக கேள்விப்பட்டேன். கத்தியில் குத்தியபோது தடுப்பதற்காக முண்டியத்து அவர்களை தள்ளியபோது உத்திராபதி என்பவர் ரோட்டில் விழுந்து கல் குத்தி காயம் ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். எனக்கு உடல்நிலை சரியில்லாததால் தகவல் தெரிந்து நேரில் போகமுடியாமல் காயம்பட்ட ஜோதிபாசுவையும் உத்திராபதியையும் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கும்படி சொன்னேன். இருவரும் மருத்துவமனைக்கு சென்றார்கள். ஜோதிபாசு கொடுத்த புகாரை

உத்திராபதியின் அண்ணன் காவலராக இருப்பதால் பதிவு செய்யவிடாமல் செய்து உத்திராபதி கொடுத்த புகாரை மட்டும் வழக்காக பதிவு செய்து கொண்டார்கள் என்று தெரிந்து கொண்டேன். எனக்கு தெரிந்த விபரங்களை நீதிமன்றத்தில் சாட்சியமாக சொல்லியிருக்கிறேன்.

**மறுவிசாரணை இல்லை.**